அரசு மருத்துவமனைகளில் குறைந்த கட்டணத்தில் முழு அளவில் சோதனை செய்து கொள்வதற்கான திட்டம்.

110—(* வினா எண் 21475) திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் குறைந்த கட்டணத்தில் முழு அளவில் ஒருவர் சோதனை செய்துகொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எங்கெங்கு அமுல்படுத்தப் படுகிறது?

(இ) அதற்காக வசூல் செய்யப்படும் கட்டணம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம், கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது;

(1) அரசு பொது மருத்துவமனை, சென்னை.

(2) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.

(3) அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

(4) அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

(5) மாவட்ட தலைமை மருத்துவமனை, சேலம்.

(6) மாவட்ட தலைமை மருத்துவமனை, திருச்சி.

(இ) ரூபாய் 10 மட்டும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஏ. சி. சண்முகம் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் இருந்து வரும் டாக்டர்கள் தங்களுடைய பணி நேரங்களில் கூட தாங்கள் சொந்தமாக பணி செய்து சம்பாதிப்பதிலேயேதான் கருத்தாக இருக்கிறார்கள். அரசு மருந்துகளைக் கூட அவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஆந்திரா அரசு கொண்டு வந்ததைப் போல டாக்டர்களின் பிரைவேட் பிராக்ட்டீசை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS